**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஜுலை மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 1/2023-ன் அசல் வழக்கு எண்.6/2019**

பெருமாள் ..மனுதாரர்/வாதி

/எதிர்/

பழனி .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 19.07.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திகேயன், அவர்கள் முன்னலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. குணசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் வாதிகள் தரப்பு 1ம் சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் மனுதாரர், இவ்வழக்கின் வாதி. மேற்படி தாவா சொத்துக்கு அருகில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் மூல ஆவணங்களைவிட அதிகப்படியாக ஆவணங்கள் உருவாக்கப்பட்டு உள்ளது என்பதை தெரிவிக்கும் வகையில் மூல ஆவணங்கள் ஏற்கக் கோரி இத்துடன் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும், மேற்படி மனு ஏற்கும் பட்சத்தில் அந்த ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது. மேற்படி மனுதாரர் தரப்பில் மனுதாரர் சாட்சியம் மட்டும் அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி

ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகிறது. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீள்திறவு செய்வதால் எதிர்மனுதாரருக்கு எந்த பாதிப்பும் இல்லை, ஆனால் மனுதாரரை விசாரணை செய்யவில்லையென்றால் மனுதாரர் தரப்பில் பெருத்த பாதிப்பு ஏற்படும். எனவே வா.சா.1ஐ திரும்ப அழைத்து விசாரணை செய்ய அனுமதி அளிக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

**3. <u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றும் அதில் மூல ஆவணங்களில் உள்ள அதிகப்படியான அளவுகளில் ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் கூறுவது சட்டப்படி தவறானது. இத்தாவா விளம்புகை குறித்த தாவாவாகும். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் உண்மை பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.7 வரையிலான சாட்சிகள் ஏற்கனவே விசாரணை செய்யப் பட்டு தற்போது கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்புடையதல்ல. இவ்வெதிர்மனுதாரர்களை அலைகழிக்க வேண்டுமென்றே கெட்ட நோக்கத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகள் மேற்கொண்டு வழக்கினை நடத்தினால் மனுதாரர்களுக்கு சாதகமான வாய்ப்பு இல்லை என்பதால், பொய்யான காரணங்களை உரைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதை செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5. கற்றறிந்த மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், தற்போது மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்/வாதி வழக்கை நிரூபணம் செய்ய அவசியமான ஆவணம் என்றும், எனவே ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து கோப்பிற்கு பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கும் பட்சத்தில் மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 தன்னை தாக்கல்

செய்துள்ள ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க வேண்டி உள்ளதால் மீண்டும் அழைத்து விசாரணை செய்ய இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. கற்றறிந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்புடைய ஆவணம் அல்ல. இந்த ஆவணம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் அவரது முன் கிரையதாரர் சம்மந்தப்பட்ட ஆவணங்கள், மேலும் மனுதாரர்/வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தில் வாதிக்கு என்ன உரிமை உள்ளது என்பதை மனுதாரர்/வாதி அவரது ஆவணத்தைக் கொண்டே நிரூபணம் செய்ய வேண்டும். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இருக்கும் பிழைகளை வைத்து மனுதாரர்/வாதி தரப்பில் சொத்தில் உரிமை உள்ளது என்பதனை கோர இயலாது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் உள்ள பிழைகளின் அடிப்படையில் வாதி தன்னுடைய வழக்கில் வெற்றி காண இயலாது. எனவே மனுதாரர்/வாதி தனது ஆவணத்தின்படி மட்டுமே இவ்வழக்கை நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராகிறார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் குறித்து வாதி சாட்சியம் அளிக்க இயலாது என்றும், எனவே இந்த மனுவினை எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

7. **<u>தீர்வு</u> :-**

இருதரப்பு மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ திரும்ப அழைத்து விசாரிக்க அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்/வாதி இந்த ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க இயலாது என்றும், எனவே அந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் இம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அவரது முன் கிரையதாரர்கள் ஏற்படுத்தியுள்ள ஆவணங்களாக உள்ளது. எனவே அந்த ஆவணங்கள் உரிய தரப்பினர் மூலம் மட்டுமே குறியீடு செய்ய இயலும். வா.சா.1 மூலம் அந்த ஆவணங்கள் குறியீடு செய்ய இயலாது. எனவே ஆவணக் குறியீடு குறித்து மனுதாரர்/ வாதி தரப்பில் ஆவணத்தில் கண்டுள்ள உரிய

நபர்களை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி உரிய மனு தாக்கல் செய்ய வேண்டும். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதி தனது ஆவணத்தின் மூலம்தான் தனது வழக்கை நிரூபணம் செய்ய இயலும் என்றும், இந்த ஆவணங்கள் குறித்து கருத்தில் கொள்ள இயலாது என்று குறிப்பிட்டு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது குறித்து வழக்கு தீர்ப்பின் போதுதான் பரிசீலிக்க இயலும். எனவே வா.சா.1 ஆவணங்கள் கோப்பிற்கு பெற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவோடு இணைத்துள்ள ஆவணங்கள் குறித்து குறியீடு செய்ய வேண்டி தன்னை மீண்டும் அழைத்து விசாரிக்க அனுமதியளிக்கக் கோரியுள்ள இந்த மனு அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர்கள் மனுவின் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்க வேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.